‘எங்கள் போராட்டம் சிங்களவருக்கு எதிரானதல்ல’

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | புரட்டாதி 8 | இதழ்: 225
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 24-9-1991

## புலிகள் பகிரங்கக் கடிதம்

(கொழும்பு)
எங்கள் போராட்டம் சாதாரண சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. இலங்கை அர சிற்கு எதிரானது என்று தமிழீழ விடுதலைப்புலிகள் சிங்கள மக்களுக்கு எழுதியுள்ள பகி
(3ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் செல்ல எம். பி.க்கள் அச்சம்

(கொழும்பு)
இன்று தாங்கள் நாடாளுமன்றம் செல்வதைத் தடுத்து நிறுத்த சில சக்திகள் முயன்று வருவதாகவும், மீறும் பட்சத்தில் உடல் ரீதியாக தாக்குதலை மேற்கொள்ளக் கூடு
(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தீவிர பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)
அரசு ஆதரவாளர்களுக்கும் அதிருப்தியாளர்களுக்கு மிடையில் வன்செயல் வெடிக்கும் எனக்கருதி கொழும்பு நகரெங்கும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
(4ம் பக்கம் பார்க்க)

★ குற்றச்சாட்டு பிரேரணையை விலக்கிக்கொண்டால்

# அரசியலமைப்பில் திருத்தம்

# அரசு ஆலோசித்து வருகிறது!

## ஜனாதிபதி ஆட்சி முறையும் ரத்தாகும்!!

(கொழும்பு)
ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு எதிரான குற்ற விசாரணை பிரேரணையை வாபஸ் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையை ரத்து செய்யும் விதமாக அரசியலமைப்பில் திருத்தங்கள் செய்வது குறித்து அரசு ஆலோசித்து வருவதாக முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.
(3-ம் பக்கம் பார்க்க)

## பதவி விலக ஜனாதிபதி மறுப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி பதவியிலிருந்து தான் விலகபோவதில்லை என்று ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸா தெரிவித்தார்.
(3-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி கடற்படை தளபதி ஆபத்தான நிலையில்

(கொழும்பு)
காரைநகர் கடற்பகுதியில் புலிகளின் தாக்குதலுக்கிலக்காகி தகர்க்கப்பட்ட படகிலிருந்த ‘வடபகுதி கடற்படைத் தளபதி’ எஸ். ஆர். சமரவீர படுகாயமடைந்து ஆபத்தான
(3ம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் உயிரிழப்பு

(கொழும்பு)
காரைநகர் கடற்பகுதியில் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்பில், கடற்படைப் படகு ஒன்று சேதம்
(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு மத்தியஸ்தம் வகிப்பேன்!

— தொண்டமான்

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனின் பதிலைப் பொறுத்து அவரை யாழ்ப்பாணத்திலோ அல்லது வேறு எங்கு சென்றாவது அவருடன் பேச்சுவார்த்தை நடத்துவேன் என அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

புலிகள் தலைவருக்குக் கடிதம் அனுப்பி 3 வாரங்கள் ஆகிவிட்டன. அடுத்த ஒரு வார காலத்திற்குள் அவரிடமிருந்து பதில் வராவிட்டால் அது பற்றித் தொடர்ந்தும் பார்த்துகொண்டு இருப்பதில் பயனில்லை.

இன்றைய நிலையில் யுத்தம்
(4-ம் பக்கம் பார்க்க)

## 24 மீனவர்களை காணவில்லை

(சென்னை)
இராமேஸ்வரம் கடற்பகுதியிலிருந்து கடந்த 19ம் திகதி 5 படகுகளில் புறப்பட்ட 24 மீனவர்கள் காணாமல் போயுள்ளதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழக சட்டசபையில் நேற்று உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.
(2-ம் பக்கம் பார்க்க)

## யுத்த நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாது! - லலித் அறிவிப்பு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் யுத்த நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் தாங்கள் செயற்படவுள்ளதாக திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

அவசரகாலச்சட்டம் நீடிப்பு தொடர்பாக பத்திரிகையாளர்கள் கேட்டபோதே திரு லலித்
(4-ம் பக்கம் பார்க்க)

## இன்று நாடாளுமன்றம் கூடுகிறது

(கொழும்பு)
இரண்டாவது நாடாளுமன்றத்தின் நான்காவது அமர்வின் முதலாவது கூட்டத்தொடர் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-40 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்படும்.
(4-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் பதவி வழங்குவதற்கு ஜனாதிபதிவிடுத்த அழைப்பை சிறிமாவோ நிராகரித்தார்

(கொழும்பு)
இலங்கையின் பிரதமர் பதவியை சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோபண்டாரநாயக்காவிற்கு தாம்வழங்கப் போவதாக ஜனாதிபதி விடுத்த அழைப்பை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நிராகரித்துள்ளார்.
(2-ம் பக்கம் பார்க்க)

## 11 படையினர் மணலாற்றில் பலி

(கொழும்பு)
முல்லைத்தீவு மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், அரசுப் படையினருக்கும் இடையில் நடைபெற்றுவரும் தொடர்ச்சியான மோதல்களில் நேற்று முன்தினம் மட்டும் 11 படையினர் கொல்லப்பட்டும், 30 படையினர்
(3-ம் பக்கம் பார்க்க)

## விமானஎதிர்ப்புதுப்பாக்கிகள் அமைச்சு மறுப்பு அறிக்கை

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாசாவினால் விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் வழங்கப்பட்டதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை பாதுகாப்பு அமைச்சு முற்றிலும் மறுத்துரைத்துள்ளது.

ஐலண்ட், திவயின, லங்காதீப ஆகிய பத்திரிகைகளில்
(4-ம் பக்கம் பார்க்க)

## அரசு ஆயுத விநியோகம் விடுதலைப் புலிகள் மறுப்பு

(புதுடில்லி)
விடுதலைப்புலிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாசா ஆயுதங்கள் வழங்கியதாகக் கூறப்படும் குற்றச் சாட்டுகளை புலிகள் மறுத்துள்ளதாக ‘இந்துஸ்தான் ரைம்ஸ்’ பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டை
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்திய நிலையம்

வேணையிலும் புலியம் கடல் சந்தியிலும் புதிய டைன முருகன வைத்திய நிலையம் யாழ்ப்பாணம் சத்திரச் சந்தி, கொட்டடி ரோட்டில் இயங்கி வருகின்றது. தொடர்பு; டாக்டர் சந் தையா நவரத்தினம். (சி-5391)

### தவறிவிட்டது

தொண்டமானாறு- பருத்தித் துறை ]வீதியில் 560152 59 V இலக்க, ஆறுமுகம் ஜெயதாசன் [சந்தை வீதி, காங்கேசன் துறை] அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மா தம்பித்துரை, சிற்றூரவைச் செயலாளர், உடுப்பிட்டி ரோட், தொண்டமானாற்றில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். (1597)

### ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி- 5396)

### SALE OF ENGLISH BOOKS

Suitable for those involved in research/collectors Rare books on Ceylon Royal Asiatic Society (Ceylon Branch) Journals 1847 to 1956, Art, Architecture, Film, Ajanta Paintings (Plates), Rembrandt Paintings (Plates) etc from 24-9-91. Eric Ganesh, 566 Hospital Rd, Jaffna. (C 5397)


## முல்லை-மணலாறில் 40,000 மக்கள் அகதிகளாக வெளியேற்றம்

[யாழ்ப்பாணம்]

மணலாறு - முல்லைமாவட்ட பகுதிகளில் விடுதலைப்புலிகளுக்கும் அரச படையினருக்கும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் கடும் யுத்தத்தினால் அப்பகுதிக் கரையோரப் பகுதி மக்கள் பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

மீன்பிடித்தொழில், விவசாயத்தையே நம்பிவாழ்ந்த இம்மக்கள் வெவ்வேறுபகுதிகட்கு சென்று அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர்.

சுமார் 40 000 மக்கள் தற்போது இடம்பெற்றுவரும் யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

25நாட்களாக நடைபெற்று வரும் யுத்தத்தால் இதுவரையில் 15க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும் பலர் காயப்பட்டிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. [56]

## நெல்லை க. பேரனின் நினைவுநூல் வெளியீடும் அஞ்சலிக் கூட்டமும்

[பருத்தித்துறை]

எழுத்தாளர் அமரர் நெல்லை க. பேரனின் நினைவு நூல் வெளியீடும் அஞ்சலிக்கூட்டமும் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் எழுத்தாளர் திரு.தெணியான் தலைமையில் நடைபெற்றது.

அமரர் நெல்லை க. பேரனின் திருவுருவப்படத்திற்கு திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை மலர் மாலையணிவித்தார்.

இக்கூட்டத்திலே திரு: எஸ். கலாமணி திரு. இ. த. குலசிங்கம், ஆசிரியர் கருணையோகன், திரு. எஸ். தமையில், திரு [எஸ் துரைசிங்கம் திரு. எஸ் சந்திரசேகரம், திரு எஸ். திருச்செல்வம் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர். பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி ஆசிரியர் எஸ் இரகுவரனிடமிருந்து அமரர் நெல்லை க. பேரனின் நினைவுநூலை திரு. பேரனின் சகோதரர் பெற்றுக் கொண்டார். எழுத்தாளரும் வைத்தியகலாநிதியுமான எம். கே. முருகானந்தன் நன்றி தெரிவித்தார் [52]

## வலிகாமம் பகுதியில் கடற்றொழிலாளர் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

(காங்கேசன்துறை)

வலிகாமம் பகுதி மூன்று உதவி அரச அதிபர் பிரிவுகளை உள்ளடக்கியதாக கடற்றொழிலாளர் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வலி வடக்கு, சண்டிலிப்பாய், கோப்பாய் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்கங்கள் பங்குபற்றிய கூட்டமொன்றிலேயே மேற்படி ஒன்றியம் உருவானது.

மருதனைமடம் இராமநாதன் கல்லூரியில் நடந்த இக்கூட்டத்தில் 19 கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளும், வலிகாமம் பகுதி உதவி அரசியல் பொறுப்பாளர் திரு பாலன், நிழல் நிர்வாக கடற்றொழில் பிரிவைச் சேர்ந்த திரு ரெஜி உட்பட மற்றும் கடற்றொழில பரிசோதகர்களும் பங்கு கொண்டனர்.

தொண்டமனாறு முதல் காழிபுரம் வரையான கரையோரப் பகுதி மீனவர்களின் கஷ்டநிலை குறித்து இந்த ஒன்றியம் ஊடாக ஒருமித்து குரல் எழுப்ப வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக ஒன்றிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (86)

## கொழும்பில் கைதான தமிழ் வாலிபர் பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

வெளிநாட்டு விசாக்கள் பாஸ்போட்டுகளுடன் பிடிபட்ட இளைஞர் ஒருவர் கடந்த வாரம் கொழும்பு நீதவான் திருமதி மகேஷி குலதிலக்கவினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதுபற்றி தெரிவிக்கப்படுவதாவது; முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளம் என்ற இடத்தைச் சேர்ந்த பொ. சிறிதரன் என்ற இளைஞர் கடந்த 12ந் திகதி விசேட பொலிஸ் பிரிவினரால் கிராண்ட்பாசில் வைத்து கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து பிரான்ஸ், கனடா, ஜெர்மனி, லண்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 130 விசாக்கள் 42 வெளிநாட்டுப்பாஸ் போர்ட்டுகள், மலேஷிய பாஸ் போட்டுகள் ஆகியவை கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. (மா)

## லெப். கிர்மானி ஞாபகார்த்த மின்னொளி உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

லெப். கிர்மானி ஞாபகார்த்தமாக குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம், மின்னொளியில் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியொன்றை மிக விரைவில் நடாத்தவுள்ளது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்படவிருக்கும் மேற்படி போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் பாடும்மீன் கழகச் செயலாளர் மேற்கொண்டுவருகின்றார்.

உதைபந்தாட்டப்போட்டியுடன் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டியும் நடாத்தப்படவிருக்கின்றது.

இப்போட்டிகளில் வெற்றி பெறும் விளையாட்டுக் கழகங்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படவிருப்பதாக பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் காரியதரிசி திரு. பௌநிராதா தெரிவித்துள்ளார். (வி)

## வணிகவள உபநிலையம்

(உடுவில்)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மருதனைமடம் கோட்டக்கல்வி பாடசாலைகள் அக்டோபர் 11ம் திகதி கண்காட்சியொன்றை நடாத்த ஏற்பாடு செய்துள்ளனர்

அன்றையதினம் மருதனைமடம் இராமநாதன் கல்லூரியில் இக்கோட்டத்துக்கான வணிகவள உபநிலையமும் திறந்து வைக்கப்படவுள்ளது [109)

## துணைப் படையினரும் களத்தில்

(யாழ்ப்பாணம்)

மணலாறு யுத்தத்தில் விடுதலைப்புலிகளுடன் நூற்றுக்கு மேற்பட்ட துணைப்படை வீரர்களும் சேர்ந்து படையினருக்கு எதிராக போரிட்டு வருகின்றனர்.

கடந்த ஐந்து நாட்களாக இவர்கள் திக்திகைக்குளம் காட்டுப்பகுதிக்குள் போரிடுகின்றனர். (56)

## அஞ்சலிக் கூட்டம்

(உடுவில்)

தியாகி திலீபனின் நான்காவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் உடுவில் வடக்கு சிற்றூரவையினரால் உடுவில் டச் வீதியில் நடாத்தப்பட்டது.

மருதனார்மடம் சந்தியில் இருந்து திலீபனின் உருவப்படம் ஊர்தியில் வைத்துக் கூட்டம் நடைபெற்ற இடம் வரை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

காங்கேசன்துறை வீதி, அம்பலவாணர் வீதி வழியாக ஊர்வலம் டச்ரோட்டை வந்தடைந்தது. ஊர்வலத்தின் போது ஒவ்வொரு வீடுகளிலும் பூரணகும்பம் வைத்து, திலீபனின் உருவப்படத்துக்கு மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர்.

உடுவில் வடக்கு சிற்றூரவை தலைவர் திரு. கந்தசாமி தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. [109]

## 10,000 மீனவர்கள் தொழிலின்றி பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு - மணலாறு ஆகிய மாவட்டங்களில் உள்ள 10,000க்கு மேற்பட்ட மீனவத்தொழிலாளர் தற்சமயம் தொழிலின்றிபாதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்கரையோரமாக வாழ்ந்துவந்த இக்குடும்பங்கள் கடற்றொழிலையே பன்நெடுங்காலமாக மேற்கொண்டுவந்தன.

இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையினால், கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்களினாலும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மீனவர்கள் 1990ம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் நாயாறு, அளம்பில், செம்மலை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், சிலாவத்தை, வட்டுவாகல், முல்லைத்தீவு குமுழமுனை ஆகிய பகுதிகளிலிருந்து இன்று வரை முற்றாகவெளியேறி வேறு இடங்களுக்கு சென்று கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களுடைய கடற்றொழில் சம்பந்தமான உபகரணங்கள் முற்றுமுழுதாகஅரசபடைகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் பல இலட்சம் பெறுமதியான பொருட்களையும் இழந்து தவிக்கின்றனர். (56)

## பிரதமர் பதவிக்கான

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நாடாளுமன்றில் ஐ.தே.க. கட்சி பெரும்பான்மைபலத்தை இழக்கும் பட்சத்தில் பிரதமர் பதவியை திருமதி பண்டாரநாயக்காவுக்கு தாம் வழங்க விரும்புவதாக திரு. பிரேமதாசா கூறியிருந்தார்.

அதிகாரமில்லாத பிரதமர் பதவியில் திரு. பிரேமதாசாவின் கீழ், கடமையாற்ற தாம் விரும்பவில்லை என்றும் இதனை தாம் ஏற்கப்போவதில்லையென்றும் திருமதி ஸ்ரீமா கூறியுள்ளார்

சுதந்திரக்கட்சியையும் தமக்கு எதிராக எதிரணியினரின் கூட்டணியையும்முறியடிக்கவே திரு. பிரேமதாசா இவ்வாறான தொரு திட்டமொன்றை தீட்டியுள்ளதாகவும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

## 24 மீனவர்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல்போன 24 மீனவர்களும் இலங்கை கடற்படையினரிடமோ அல்லது இந்திய கடற்படையிடமோ சிக்கியிருக்கலாம் என்றும் இவர்களை தேடும்பணியில் இந்திய கடற்படை ஹெலிகாப்டர்களின் உதவி கோரப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் 17 இந்திய மீனவர்கள் நெடுந்தீவுக் கரையை அடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி 17 பேரும் 4 படகுகளில் நடுக்கடலில் வரும் போது இலங்கை கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு இம்சிக்கப்பட்டதாகவும் அதனை தொடர்ந்து நீந்திக் கரை சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 19ம் திகதி படகுகளில் புறப்பட்ட 24 பேரில் மிகுதி ஏழு பேரின் கதி என்னவாயிற்று என்பது பற்றிய தகவல் எதுவும் இதுவரையில் இடைக்கவில்லையென்றும் கூறப்படுகிறது. (க)

## சுயதொழில் கடனுதவி

[யாழ்ப்பாணம்]

இராணுவ நடவடிக்கையினால் தொழில் பாதிப்படைந்திருக்கும் ஐம்பது குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக்குழுவினால் சுயதொழில் முயற்சிக்கான கடனுதவி அண்மையில் வழங்கப்பட்டது.

இதேவேளை 84 குடும்பங்களுக்கு ஆடு, மாடு மற்றும் வியாபாரத்திற்கான கடனுதவிகளும் வழங்கப்பட்டன.


ஸ்ரீராம ஜெயம்

### திருமண நிறைவேற்று நிலையமும், சோதிட நிலையமும்

எங்களிடம் பலதரப்பட்ட ஆண்கள், பெண்களின் ஜாதகக்குறிப்புகள் உண்டு. உடன் திருமணத்திற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும். விபரங்களுக்கு;—

ஆஸ்பத்திரி வீதி,
மந்திகை, புலோலி.

(எ-1593)


## இருல் பதனிடும் தொழிற்சாலை மீண்டும் ஆரம்பிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி அன்றிஸ் இருல் பதனிடும் தொழிற்சாலை மீண்டும் இயங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக கூறப்படுகிறது.

அண்மையில் கொழும்பு சென்றுவந்த தொழிற்சாலை உயரதிகாரிகள் கொண்ட தூதுக்குழு வெளிநாட்டு நிறுவன தலைமைக்காரியாலயத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கம் காணப்பட்டதைத் தொடர்ந்தே விரைவில் இத்தொழிற்சாலை இயங்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதென அதிகாரிகள் தெரிவித்தனர். (56)

## தியாகியே திலீபா!

ஈழத் தமிழர்
இதயங்களிலே
நீங்காது
நிறைந்திருக்கும்
தியாகியே!
திலீபா!!
ஈழத்தமிழரின்
விடுதலைக்காக
நீ...
மரணத்தை
அணு அணுவாகச்
சுவைத்தாய்!

உன்னுடைய
தியாகச் சுடரொளியில்
பசுத்தோல் போர்த்திய
பாரதத்தின்
நயவஞ்சக
நரிவடிவம் தெரிந்தது!
ஃ
தியாகியே!
உனது
தியாகச் சுடரின்
வெம்மையில்
அடிமை விலங்கு
பொடிப் பொடியாகும்!
விடுதலை வாழ்வு
உதயமாகும்!
அந்நாள்
பொன்னாள்
மிக விரைவில்
மலரும்!

— குன்று தோருடி

## கலைஞர்கள் கலந்துரையாடல்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியிலுள்ள எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்று புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாசாலையில் யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. சிட்டு தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது கலைஞர்கள், எழுத்தாளர்களின் நன்மை கருதி ஒரு சங்கம் ஒன்றும் உருவாக்கப்பட்டது.

## இராசி பலன்

24-09-1991
செவ்வாய்க்கிழமை
தமிழுக்கு புரட்டாதி 8

பிரதமை பி. இ. 4. 29 வரை;
உத்திரட்டாதி மு இ 11-44 வரை;
இராகுகாலம் மாலை 3-02 முதல் 4-32 வரை;
சுபநேரம் காலை 10-32 முதல் 12-02 வரை அமிர்த சித்தயோகம்.

மேடம்: வருவாய் குறைதல், மனக்குழப்பம், வெறுப்பு

இடபம்: வெகுஜனமதிப்பு, குடும்பசுகம், தொழில் லாபம்.

மிதுனம்: வாக்கு வன்மை, அவசரபோக்கு, வெற்றி வாய்ப்பு.

கடகம்: விதண்டாவாதம், குற்றஉணர்வு, மனப்பயம்.

சிங்கம்: தடுமாற்றம், தப்பபிப்பிராயம், பயணத்தடை.

கன்னி: மனக்களிப்பு, இராஜதந்திரம், குடும்பசுகம்.

துலாம்: சுபகாரியம், இனசன உறவு, காரியசித்தி.

விருச்சிகம்: அடிமை நிலை, தொழில் பிணக்கு, மனச்சுமை

தனுசு: கோப உணர்வு, தொழில் பாதிப்பு. கடன் சுமை.

மகரம்: எதிர்பாராத உதவி குடும்பமகிழ்ச்சி, புத்திரர் பிலவு

கும்பம்: குழப்பமடைதல், சகோதர பகை, மறதி.

மீனம்: காரியபலிதம், குடும்ப பாராட்டு, பணவரவு.

ஜோஸ்யர்

# ★ ஒவ்வொரு வருடமும் அகதிகளாக 25,000 தமிழர் ஐரோப்பாவில் தஞ்சம்

(ஜெனிவா)

ஐரோப்பிய நாடுகளுக்கு ஒவ்வொரு வருடமும் சுமார் 25,000 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக செல்வதாய் ஜெனிவாவிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகதிகளாக ஐரோப்பிய நாடுகள் வரும் இலங்கைத் தமிழர்களில் பெருமளவினர் அதற்கான எந்தவித சான்றுகளையும் கொண்டுவருவதில்லையெனவும், இதனைப்பலர் வெளியேற்றப்படக்கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளதாகவும் கூறப்படுகிறது

சுவிஸில் மாத்திரம் தற்போது 10,000 திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர் அகதி அந்தஸ்து கோரியிருப்பதாகவும் ஜெனிவாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சுவிஸில் இலங்கைத் தமிழர்கள் தங்கியிருக்கும் வீடுகள், ஹோட்டல்கள் ஏனைய இடங்கள் பல 25 க்கும் மேற்பட்ட தடவை குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இதனால் அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் உட்பட பிற நாட்டவர் மத்தியில் ஒருவித அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### தியாகத்தீ- 10

பத்தாம் நாளும்
பாவிகள் வரவில்லை
சத்திய வேள்வியில்
சங்கம மாகிடும்
சித்திரை நிலவு
சிமிப்பினை இழந்தது!

- வாஞ்சிநாதன்.

## வைத்தியசாலைகள் குறைபாடுகள் பற்றி நேரில் விளக்குவதற்கு நால்வர் குழு கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட நால்வர் கொண்ட தூதுக்குழு நேற்று முன்தினம் கொழும்பு புறப்பட்டுச் சென்றுள்ளது:

இக்குழுவில் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம், பணிப்பாளர் திரு. கனகசபை, வைத்தியகலாநிதி சிவகுமாரன், கணக்காளர் திரு. சபாநாதன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளிலுள்ள குறைபாடுகள், மருந்துப் பிரச்னைகள். தெல்லிப்பழை வைத்தியசாலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை போன்ற விடயங்களைப் பற்றி எடுத்துரைக்கவும், யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள சகல தரத்திலான ஊழியர்கள் பற்றுக்குறைகள், மருந்துப் பிரச்சனைகள், இன்னும் வழங்கப்படாமலுள்ள கடந்த வருட 6 மாத கஷ்டநிவாரண ஊக்குவிப்புப்பணம் கிடைப்பது சம்பந்தமான விவகாரங்கள் பற்றி கொழும்பு சென்றுள்ள தூதுக்குழு சுகாதார அமைச்சு செயலாளர் உட்பட மற்றும் பல உயரதிகாரிகளை சந்தித்து எடுத்துரைக்கவுள்ளது. (56)

## காணமல் போனவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம்

(காங்கேசன்துறை)

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச் சங்க கிளை ஊடாக இராணுவ நடவடிக்கையால் இறந்த, ஊனமுற்ற, காணமல்போனவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுகிறது.

மகிலாகத்தில் உள்ள மேற்படி செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்தில் வைத்து இப்பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இறந்தவர்களின் உறவினர்கள் மரண அத்தாட்சிப்பத்திரமும், ஊனமுற்றவர்கள் வைத்திய அத்தாட்சிப் பத்திரமும் காணமற்போனோர் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் வழங்கும் அத்தாட்சிப்பத்திரமும் சமர்ப்பித்து இந்த உலர் உணவைப் பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது (86)

## குற்றச்சாட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் கவனத்திற்கு இந்த ஆலோசனை கடந்த சனிக்கிழமை சமர்பிக்கப்பட்டதாகவும் லலித் தெரிவித்துள்ளார். பிரேரணையை விலக்கிக் கொள்வதற்காக அரசு மேற்கொள்ளும் தந்திரோபாயங்களில் இதுவும் ஒன்று என இந்த பிரேரணையை ஆதரிக்கும் எம். பிக்கள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் வெஸ்மினிஸ்டர் ஆட்சிமுறைக்கு மீண்டும் செல்லும் விதத்தில் அரசியலமைப்பில் திருத்தம் ஏற்படுமானால் அதனை அதிருப்தியாளர் குழு எம் பிக்கள் எந்த விதத்திலும் எதிர்க்கவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இது சம்பந்தமாக எடுக்கப்படும் முடிவுகள் அனைத்தும் ஒரு சர்வஜன வாக்கெடுப்புக்கு பின்பே அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும் லலித் தெரிவித்தார் [153]

## பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தாய் மன்றத்தினால் விபுலானந்தர் ஞாபகார்த்த பொதுஅறிவுப் போட்டி பதினான்கு பாடசாலைகளில் நடத்தப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்குபற்றினர்.

யாழ். இந்துக்கல்லூரி முதலாம் இரண்டாம் இடத்தையும் பரியோவான் கல்லூரி மூன்றும் இடத்தையும் இப்போட்டியில் பெற்றுக்கொண்டது.

## மாவீரரின் பெற்றோர் பரிசுகள் வழங்கினர்

(பருத்தித்துறை)

யாழ். கோட்டையை மீட்கும் முயற்சியின்போது வீரமரணமெய்திய வடமராட்சிப் பகுதி வீரவேங்கைகளின் ஞாபகார்த்தமாக தும்பளை இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்திய இறுதிப் போட்டிகளும் பரிசளிப்புவிழாவும் தும்பளை கணக்கிலாவத்தை விநாயகராலய மைதானத்தில் மாவீரர் புவியின் தந்தை திரு. வி. சேதுநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிலே தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்பு யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். இப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை யாழ் கோட்டையை மீட்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வீரமரணமெய்திய வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த17 மாவீரர்களின் பெற்றோர்களும் வழங்கினர். கலைநிகழ்ச்சிகளும்இடம் பெற்றன. (52)

## பதவி விலக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனக்கு எதிரான அதிருப்தியாளர்கள் குழு தெரிவித்த கருத்தைத் தொடர்ந்தே இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐ தே. கட்சி ஆதரவாளர்கள் நிரம்பிய கூட்டத்திலே பேசியஜனாதிபதி கூறியதாவது; பதவி விலக வேண்டியது நான் அல்ல. கட்சியிலிருந்து வெளியேறிய அதிருப்தியாளர்களே தமது பதவிகளை ராஜினமா செய்யவேண்டும் என்றார். [153]

## நல்லூர் வீதியில் திலீபன் நினைவாக மௌன உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவையொட்டி நேற்றுமாலை 5 மணியளவில் நல்லூர் கந்தன் ஆலயவீதியில் நீராகாரமின்றி இளைஞர் ஒருவர் நாலுநாள் மௌன உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

காரைநகர் மக்கள் சார்பில் ந. தர்மராசா என்ற இந்த இளைஞர் தொடர்ந்து நான்கு நாட்களாக வியாழன் மாலை 5 மணிவரை உண்ணாவிரதமிருப்பார்.

தியாகி திலீபன் நினைவாக கடந்த வியாழக்கிழமை இவரும் இவருடன் இணைந்து 9 சிறுவர்களும் காவடி ஊர்வலம் நடாத்தியதும் குறிப்பிடத்தக்கது: (சி)

## ஒய்வூதியம் பணமாக

(சாவகச்சேரி)

பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுவோருக்கு ஜூலை, ஆகஸ்ட் மாத ஒய்வூதியம் பணமாக வழங்கப்படுவதாக சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார்.

## விற்பனை நிலையம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை நிலையம் சாவகச்சேரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விற்பனை நிலையத்தில் கால்நடைகளுக்கான உணவுப் பொருட்களும் மருந்துவகைகளும்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 11 படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயம் அடைந்துள்ளதாகவும் அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில், இப்பகுதியில் நடைபெறும் மோதலில் படையினரின் முழுப் பலமும் பிரயோகிக்கப்பட்டும், விடுதலைப் புலிகளின் திரமிகு தாக்குதல்களினால் படையினர் சிக்கித் திணறுவதாகவும், படையினரின் முன்னேற்றம் பெரிதும் தடைப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஈ)

## ஜே. வி. பி. மத்திய குழு உறுப்பினர் பேட்டி

(லண்டன்)

இலங்கையிலிருந்து தப்பியோடிய ஜே வி பி இயக்க மத்திய குழு உறுப்பினரான சோமவன்ச அமரசிங்க நேற்று பேட்டியளித்தார்.

இவரது பேட்டி முழுமையாக ஒலிபரப்பப்பட்டது. எந்தநாட்டில் தங்கியிருந்து இவர் இந்த பேட்டியை அளித்தார் என்ற விபரம் பி. பி. ஸி, யில் வெளியிடப்படவில்லை.

ஜே. வி. பியை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது என்று சோமவன்ஸ தமது பேட்டியில் தெரிவித்தார். (மா

## எங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கக் கடிதமொன்றில் தெரிவித்துள்ளனர்.

இக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது: தமிழ்ப்பிரதேசங்களில் அரச உதவியுடன் அமைக்கப்படும் சிங்களக் குடியேற்றத்திட்டம் 'போர்முனை எல்லையில் ஒரு மனிதக்கவசமாக' வலிந்து புகுத்தப்பட்டுள்ளது,

இந்த குடியேற்றவாசிகளுக்கு இலங்கை அரசு ஆயுதம் வழங்கியுள்ளதினால் இவர்களே அடிக்கடி தாக்குதலுக்குள்ளாகுகிறார்கள் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடபகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் கடலிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

இப்படகு புலிகளின் நேரடித் தாக்குதலுக்கிலக்காகி தகர்ந்ததா அல்லது கடற்கண்ணியில் சிக்கித் தகர்ந்ததா என்பது பற்றி இராணுவ தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# சபாநாயகருக்கு அச்சுறுத்தல்
# பொலிஸ் அதிபரிடம் புகார்

(கொழும்பு)

தமது காரை இனந்தெரியாத நபர்கள் பின் தொடர்வதாகவும் தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகமட் பொலிஸ்மா அதிபரிடம் புகார் செய்துள்ளார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன் தமது கார் வழிமறிக்கப்பட்டு தாம் பயமுறுத்தப்பட்டது பற்றியும் அவர் இந்தப் புகாரிலும் குறிப்பிட்டுள்ளார்

இதேபோல் பல அரசியல்வாதிகளும் இவ்வாறான புகார்களை பொலிஸ்மா அதிபருக்கு தெரிவித்துள்ளனர். (சி)

### நாடாளுமன்றம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மெனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கும் சபாநாயகருக்கும் இவர்கள் அறிவித்துள்ளனர்.

# அனுராவை பிரதமராக்க 'பிரேமா' விருப்பம்

(கொழும்பு)

ஐ. தே. கட்சி நாடாளுமன்றில் பெரும்பான்மை பலத்தை இழந்தால் திரு. அநுரா பண்டாரநாயக்காவிற்கு பிரதமர் பதவியை வழங்க தாம் விரும்புவதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

முதலில் இப்பதவியை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிற்கு வழங்க விரும்புவதாக ஜனாதிபதி தெரிவித்ததை திருமதி ஸ்ரீமாவோ நிராகரித்ததையடுத்தே ஜனாதிபதி தற்போது இவ்வாறு கூறியுள்ளார்

எனினும் இதுகுறித்து திரு. அநுரா பண்டாரநாயக்காவின் கருத்துகள் எதுவும் இதுவரை தெரியவரவில்லை. (சி)

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் இன்று கூடும்போது அங்கு ஜனாதிபதி உரை நிகழ்த்தவுள்ளார்.

இதன்போது தலைநகரில் திரு பிரேமதாசாவின் ஆதரவாளர்களும் அதிருப்தியாளர்களும் வன்செயலில் ஈடுபடக்கூடும் என பொலிசார் எதிர்பார்ப்பதால் பொலிஸ் ரோந்தும், பாதுகாப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# கல்வி சேவை ஆணைக்குழு நடவடிக்கைக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கல்விச் சேவை ஆணைக்குழுவின் தொழில் அபிவிருத்திப் பிரிவினால் ''புதிய ஆசிரியர்களுக்கு ஆலோசனைகள்'' என்ற தலைப்பில் வெளியாகிய நூலில் முதல் 28 பக்கங்களில் மாத்திரம் 1500க்கு மேற்பட்ட எழுத்துப் பிழைகள் உள்ளதாகவும், இது தமிழ் மொழியைக் கொலை செய்யும் அல்லது சிதைக்கும் கல்விச் சேவை ஆணைக் குழுவின் நடவடிக்கை என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

---

## தியாகி திலீபன் 4ம் ஆண்டு நினைவாக மூன்று நாட்கள்
## உண்ணா நோன்பும் நினைவுக் கூட்டமும்

காலம்:- 24, 25, 26 - 09 - 91

இடம்:- நல்லூர்

24 - 09 - 91

### 1ம் நாள் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| தீபம் ஏற்றுதல் | — திரு. இராசையா அவர்கள் (தியாகி திலீபனின் தந்தையார்) |
| தேசியக்கொடியேற்றல் | — திரு ஐயர் அவர்கள் பொறுப்பாளர் தமிழீழ விடுதலைப்புலிகள்வலிகாமம் |
| உண்ணா நோன்பு | — காலை 8-00 மணிக்கு ஆரம்பமாகி பி. ப. 4 மணிக்கு நிறைவடையும் |
| நினைவுக் கூட்டம் | — 6-00 மணிக்கு ஆரம்பம் |
| தலைமையுரை | — மலர்கொடி, பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி, வலிகாமம். |
| நினைவுரைகள் | — திரு. அரசண்ணா, பொறுப்பாளர் விடுதலைப் புலிகள் மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரிவு வடமராட்சி. செல்வி பாரதி அவர்கள் விடுதலை புலிகள் மகளிர் முன்னணி. செல்வி மாலினி அவர்கள் விடுதலை புலிகள் மகளிர் முன்னணி. திரு.தேவர் அவர்கள்மூத்த உறுப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகள். (கலை, பண்பாட்டுக்கழகம்) |
| சிறப்புரை | — திரு. ரூபன் அவர்கள், பொறுப்பாளர் அரசியல் நிர்வாகம் திருமலை மாவட்டம். |
| கலை நிகழ்ச்சிகள் | — 1. வில்லிசை (சின்னமணி அவர்கள்) 2. நாடகம் |

எங்கள் தாயகத்தின் சுதந்திரத்திற்காக தன் தேகத்தையே ஒரு போர்களமாக்கிய தியாகி திலீபன் நினைவு கூற தமிழீழம் அணிதிரளட்டும்.

மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு
பிரிவு
விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

---

### அழைப்பு

[யாழ்ப்பாணம்]

சகல தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் மாணவர்களும் 24, 25, 26-ம் திகதிகளில் நல்லூரில் நடைபெறவுள்ள உண்ணாவிரத நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது

ஜனாதிபதிக்கு எதிராக —

# பிரிட்டனிலும் குற்றப்பிரேரணை தயாராகிறது!

[கொழும்பு]

தமக்கு எதிராக, பிரிட்டனில் மற்றுமொரு குற்றப் பிரேரணை தயாரிக்கப்படுவதாக ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

தமக்கு எதிராகக் குற்றப் பிரேரணைகள் எதுவும் கொண்டுவரும் அளவிற்குத் தாம் எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்றும் அவர் கூறினார்.

தாமே இன்றும் இந்நாட்டின் ஜனாதிபதி என்றும, நாளையும், அடுத்த 4 வருடங்களுக்குத் தொடர்ந்தும் தாம் ஜனாதிபதியாக இருப்பாரெனவும் ஜனாதிபதி கூறியுள்ளார். (சி)

### யுத்த நடவடிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்:

வடக்கு-கிழக்கில் புலிகளுக்கெதிராக யுத்தம் நடக்கும் போது கட்சி உட்பூசல்களை தீர்த்துக்கொள்ளுமாறுதம்மை முதலிராம நிக்காய, அமரபுர நிக்காய, களனி மகாநாயக பிரதமகுருமார் கேட்டதாகவும் கூறினர். (சி)

தமிழக காவல்துறையை நவீனமயப்படுத்த

# 80 கோடி ரூபா வழங்குமாறு ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

தமிழகக் காவல்துறையை நவீன மயப்படுத்துவதற்காக 80 கோடி ரூபா கோரப்பட்டுள்ளதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறினார்

தமிழகக் காவல்துறைக்கு வெடிமருந்துகள், ஆயுதங்கள் வழங்கியும், அதிரடி முறைகளில் பயிற்சி அளித்தும், புதிதாக இயங்குவதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தும், கூடுதல் படைப் பிரிவுகளை அமைத்தும், நவீன செய்தித் தொடர்பு வசதிகளை ஏற்படுத்தவும், காவல்துறையை நவீனமயப் படுத்தவும், பலப்படுத்தவும் இந்நிதி தேவைப்படுவதாகச் செல்வி ஜெயலலிதா கூறினார்.

தமிழ்நாட்டில் இலங்கைப் போராளிகளின் நடவடிக்கைகள் ஓரளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளபோதிலும் அவர்களிடமிருந்துவரும் அச்சுறுத்தலை கட்டுப்படுத்தவே மத்திய அரசிடமிருந்து இந்த உதவி கோரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

### யுத்த நிறுத்தம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தொடர்வதைத் தடுத்து, யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு மத்தியஸ்தம் செய்து உதவ முன்வந்துள்ளேன். இந்த எண்ணத்துடன்தான் விடுதலைப் புலிகளுக்கு கடிதம் எழுதினேன். அதற்குப் பதில்வரும். வராவிட்டால் சும்மா விட்டு விடவேண்டியதுதான், ஆனால் இப்படி இருந்துவிடமுடியுமா?

திரு. பிரபாகரனுக்கு கடிதமெழுதிவிட்டு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாசென்றேன். அங்கு பிரதமர் திரு. நரசிம்மராவைச் சந்தித்துப்பேசினேன். இலங்கை நிலைமை பற்றியும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பற்றியும் அவருக்கு எடுத்துக் கூறினேன்.

இதன் போது விடுதலைப் புலிகள் தலைவருக்கு நான் கடிதம் எழுதியது பற்றியும் அவர் விசாரித்தார்: தமிழக சட்டசபை அமைச்சர்கள் இலங்கை பிரச்னையை தீர்க்குமாறு கேட்டனர் என்றும் தொண்டமான் கூறினார். (சி)

சிவராசன் முன்னர் —

# கடத்தலில் ஈடுபட்டு கைதானவராம்

(சென்...)

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முக்கிய நபராகக் கருதப்படும் சிவராசன், முன்னர் தமிழ்நாட்டில் கடத்தல் பொருள்களோடு வந்ததற்காகக் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டவர் என எதிர்க்கட்சித் தலைவர் திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குற்றம் சாட்டியுள்ளார்.

கடத்தல் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட சிவராசனை செங்கல்பட்டு நீதிமன்றம் பிணையில் விட மறுத்த பின்பு, உயர் நீதிமன்றத்தின் மூலம் பிணையில் வர அப்போது தி. மு. க. பிரமுகர்கள் உதவி புரிந்தனர் எனவும் திரு. பாலசுப்பிரமணியம் கூறினார்.

### அரசு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு லலித் அத்துலத்முதலி பகிரங்கமாகத் தெரிவித்து வருவதையடுத்து இப்பிரச்னை பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளதாகவும் பத்திரிகை தெரிவித்துள்ளது

இந்த மறுப்பை எந்த நாட்டைச் சேர்ந்த புலிகளின் வட்டாரங்கள் மறுத்துள்ளன என்பது பற்றி எதுவும் தெரியவரவில்லை. (சி)

### கடற்படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்துள்ளது.

இவ்விபத்தில் கடற்படையினர் மூவர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார். மற்றும் நால்வரைக் காணவில்லை என்று அரசுதரப்பில் அறிவிக்கப்படுகிறது.

### இன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி தமக்குள்ள அதிகாரத்தைப் பிரயோகித்து கடந்த ஆகஸ்ட் மாதம் 3-ந் திகதி நள்ளிரவிலிருந்து நாடாளுமன்றத்தை ஒத்தி வைத்திருந்தார்.

நாடாளுமன்ற அமர்வின் போது ஜனாதிபதி ஆரம்ப உரையை நிகழ்த்துவார். (158)

### விமான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வெளியிடப்பட்ட செய்தியை அடுத்து பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் அது முற்றிலும் பொய்யான செய்தியென தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது.

பொறியியலாளர் கொலை —

# தென்னாபிரிக்க கறுப்பின பொலிஸ்காரர் கைது

(ஜொகனஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் இரு தமிழ் பொறியியலாளர்களை சுட்டுக்கொன்ற கறுப்பின பொலிஸ்காரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஒரு மனநோயாளி என்றும் இவர் ஏற்கனவே வேறொருவரை கொல்ல முயற்சித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்ட இருவரதும் சடலங்கள் நண்பர்களால் அடையாளம் காணப்பட்டது.

இறுதிச் சடங்குகள் தென் ஆபிரிக்காவிலேயே நடைபெற்றது. இதையடுத்து கொலைச் சம்பவம் நடைபெற்ற 'திரான்ஸ்கீ' பகுதியில் ஆசிய நாட்டவர்களிடையே பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது (சி)

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Numbes B/10336/81.